செ.வெ.எண்: 29/ஜுன் நாள் : 14.06.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் /சிறுபான்மையினர் மாணவர் மற்றும் மாணவியர்களுக்கு விடுதிகளில் சேர்வதற்கான விண்ணப்பங்கள் வழங்கப்படவுள்ளன

### மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் /சிறுபான்மையினர் மாணவர் மற்றும் மாணவியர்களுக்கென கீழ்க்கண்டவாறு மொத்தம் 64 விடுதிகள் அரசால் நடத்தப்பட்டு வருகிறது.

| வ.எண் | விடுதியின் விவரம் | மாணவர்களுக்கானது | மாணவியர்களுக்கானது |
|---|---|---|---|
| 1. | பள்ளி விடுதிகள் | 33 | 22 |
| 2. | கல்லூரி விடுதிகள் | 4 | 5 |

2. பள்ளி விடுதிகளில் 4 முதல் 12-ம் வகுப்பு வரை பயில்கின்ற மாணவ/மாணவியர்களும் கல்லூரி விடுதிகளில் பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பு, பாலிடெக்னிக்/ ஐ.டி.ஐ படிப்புகளில் பயிலும் மாணவ/மாணவியர் சேரத் தகுதியுடையவர்கள் ஆவர். பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் விடுதிகளில் அனைத்து வகுப்பைச் சார்ந்த மாணவ/மாணவிகளும் குறிப்பிட்ட விகிதாச்சார அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

3. விடுதிகளில் பின்வரும் சலுகைகள் எவ்வித செலவினமும் இல்லாமல் வழங்கப்படுகிறன்றன.

அனைத்து விடுதி மாணவ/மாணவியருக்கு உணவும் தங்கும் வசதியும் அளிக்கப்படும்.

10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியருக்கு 4 செட் பாலியெஸ்டர் காட்டன் சீருடைகள் வழங்கப்படும்.

10 ஆம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவியருக்கு சிறப்பு வழிகாட்டிகள் வழங்கப்படும்.

4. <u>விடுதிகளில் சேருவதற்கான தகுதிகள்:</u>

பெற்றோர் / பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ.1,00,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இருப்பிடத்திலிருந்து பயிலும் கல்வி நிலையத்தின் தொலைவு குறைந்தபட்சம் 8 கி.மீக்கு மேல் இருக்க வேண்டும். இந்த தூர விதி மாணவியருக்கு பொருத்தாது.

5. தகுதியுடைய மாணவ/மாணவியர் விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட விடுதி காப்பாளர்/காப்பாளினிடமிருந்தோ அல்லது மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்திலிருந்தோ இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

6. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பள்ளி விடுதிகளை பொறுத்தவரை சம்மந்தப்பட்ட விடுதி காப்பாளர், காப்பாளினியிடம் அல்லது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் 30.06.2016-க்குள்ளும் கல்லூரி விடுதிகளை பொறுத்தவரை சம்மந்தப்பட்ட விடுதி காப்பாளர்/காப்பாளினியிடம் அல்லது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவகத்த்தில் 15.07.2016-க்குள்ளும் சமர்பிக்க வேண்டும். மாணவ/மாணவியர்கள் விண்ணப்பிக்கும்பொழுது விண்ணப்பத்துடன் சாதி மற்றும் பெற்றோரது ஆண்டு வருமானம் குறித்த சான்றிதழ்கள் யாதும் அளிக்கத் தேவையில்லை. தேர்வு செய்யப்பட்டு விடுதியில் சேரும்போது மட்டும் இச்சான்றிதழ்களை அளித்தால் போதுமானது.

7.தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு விடுதியிலும் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கென தனியே 5 இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எனவே மாணவ/மாணவியர்கள் அரசின் இச்சலுகைகளை பெற்று, பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**